செய்தி வெளியீடு எண். 259 நாள்: 22.07.2021

## சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக், உத்தம் ஜீவன் ரக்ஷா பதக் மற்றும் ஜீவன் ரக்ஷா பதக் ஆகிய விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

ஓவ்வோராண்டும் மத்திய அரசின் உள்துறை சார்பில், தைரியமான மற்றும் மனிதாபிமானம் மிக்க பணிகளைச் செய்து உயிர்காக்கும் முயற்சியில் ஈடுபட்டு மனித உயிர்களைக் காத்த நபர்களுக்கு சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக், உத்தம் ஜீவன் ரக்ஷா பதக் மற்றும் ஜீவன் ரக்ஷா பதக் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

2021-ம் ஆண்டுக்கு வீர சேவை புரிந்தவர்களைக் கௌரவிக்கும் விதத்திலும் இவர்களைப் போல் மற்றவர்களும் ஆபத்துக் காலத்தில் உதவிகள் புரிவதை ஊக்குவிக்கும் விதத்திலும் இவ்விருதுகள் வழங்கப்படுகிறது.

1) விண்ணபத்தாரர்கள் 01.10.2019 முதல் தற்போது வரையிலான காலத்திற்குள் ஆற்றிய வீர சேவையைத் தெளிவுபடுத்தி உள்ளடக்கிய கருத்துருக்கள் நாளிதழ்களில் வெளிவந்த செய்திக்குறிப்புகள் போன்ற சான்றுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2) தைரியமான மற்றும் மனிதாபிமானம் மிக்க பணிகளைச் செய்து உயிர்காக்கும் முயற்சியில் ஈடுபட்டு மனித உயிர்களைக் காத்த நபர்கள் இவ்விருது பெறத் தகுதியுடையவர்.

3) விபத்துக்கள், ஆபத்துக் காலங்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் போன்ற தருணங்களில் மனித உயிர்காத்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

4) ஆயுதப்படைப் பிரிவைச் சேர்ந்தோர், காவல்துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி சேவைத் துறையினர் ஆகியோர் தம்முடைய பணிநேரத்தின்போது அல்லாமல் இத்தகைய வீர சேவை புரிந்திருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கலாம்.

5) விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் 07.08.2021 ஆகும்.

மேலும் விவரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் 7401703482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.